(ஆ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. சட்ட முன்வடிவுகள்

(அறிமுகம் செய்தல்)

(அ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு (சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

முற்பகல் 11-00

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS